# இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகம் – 2012

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியமங்கள்

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

**(அ) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 01,**

(i) நியமத்தின் 21 (இ) பிரிவின் பிரகாரம் உரிய நிறுவகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் தரவுகளுடன் உள்ளவாறான தரவுகளின் ஒப்பீடு ஒன்றோ அல்லது பாதீட்டின் எண்ணிக்கை வேறாக நிரலொன்றில் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நிதி நிலைமை தொடர்பான கூற்றில் தேறிய சொத்துக்கள் / உரிமையின் கீழ் திரட்டிய மிகை அல்லது பற்றாக்குறை என்பன ஒதுக்கங்களிலிருந்து வேறாக காண்பிக்கப்பட வேண்டிய போதிலும் திரட்டிய பற்றாக்குறை அவ்வாறான வகைப்படுத்தல் ஒன்று இல்லாமல் பொது ஒதுக்கத்துடன் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது.

**(ஆ) இலங்கை அரச துறைக் கணக்கீட்டு நியம இலக்கம் 02,**

(i) நிதிசார் செயலாற்றல் கூற்றில் பற்றாக்குறையை கணக்கிடும் போது அடிப்படையாகக் கொள்ளப்படாத ரூபா 64,693,041 கூட்டுத்தொகையான 03 உருப்படிகள் காசுப் பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டு நடவடிக்கைகளால் உருவான தேறிய காசுப் பாய்ச்சலை கணக்கீடு செய்யும் போது சீராக்கம் செய்த காரணத்தால் ரூபா 27,364,799 ஆன காசு உட்பாய்ச்சல் மற்றும் ரூபா 37,328,242 ஆன காசு வெளிப்பாய்ச்சல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ii) காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகள் மற்றும் நிதி செயற்பாடுகளின் கீழ் ரூபா 13,011,699 ஆன 02 உருப்படிகளுக்குரிய காசு உட்பாய்ச்சல் குறைவாகவும், ரூபா 62,864,463 ஆன உருப்படி ஒன்றின் நிதி வெளிப்பாய்ச்சல் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.

(iii) தேறிய பற்றாக்குறைக்கு சீராக்கப்பட வேண்டிய நடைமுறைப் பொறுப்புக்கள் மீதி அதிகரிப்பு ரூபா 3,136,008 ஆக இருந்த போதும் ரூபா 2,404,193 ஆக காசுப் பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட்ட காரணத்தால் காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 731,815 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(iv) நிதிசார் செயலாற்றல் தொடர்பான கூற்றில் 2012 ஆம் ஆண்டிற்குரிய பணிக்கொடை ஒதுக்கீட்டின் பெறுமதி ரூபா 15,395,535 ஆக இருந்ததுடன், காசுப் பாய்ச்சல் கூற்றில் தேறிய இலாபம் அதனை ரூபா 14,886,506 ஆக இணக்கம் செய்யப்பட்டமையால் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு உட்பாய்ச்சல் ரூபா 509,029 ஆல் கூடுதலாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) புத்தள மற்றும் ரஹகங்கலையில் அமைந்துள்ள கல்விப் பீடம் 2006 ஆம் ஆண்டின் போது சப்ரகமுவ பல்கலைக்கழகத்திற்கு கையேற்கப்பட்டு, அங்கிருந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியான ரூபா 63,173,244 தொகையை மூலதனமாக்குவதற்குப் பதிலாக சொத்துக்கள் மீள் மதிப்பீட்டுக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தன. 2006 ஆம்

ஆண்டிலிருந்து கணக்காய்வின் போது சுட்டிக் காண்பிக்கப்பட்டிருந்த இந்த பிழையான பதிவுகளை 2012 ஆம் ஆண்டின் இறுதி வரையில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 செப்தம்பர் 25 ஆம் திகதி மீள் மதிப்பீடு செய்யப்பட்ட வாகனங்களின் பெறுமதி 2012 ஆம் ஆண்டின் போது கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி அடிப்படையில் 2011 ஆம் ஆண்டிற்குரிய பெறுமானத் தேய்வை சீராக்கம் செய்யும் போது மீள் மதிப்பீடு செய்யப்பட்ட திகதியிலிருந்து சீராக்கம் செய்யாமல் 2011 இன் ஆண்டு முழுவதற்கும் பெறுமானத் தேய்வு கணக்கிடப்பட்டு ரூபா 5,297,730 பொது ஒதுக்கத்திற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.2.3 பெறவேண்டிய கணக்குகள்

13 பல்கலைக்கழக ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 1,340,190 தொகையான ஊழியர் கடன் மீதிகளை 2013 யூன் 15 ஆம் திகதி வரையில் அறவிடுவதற்கு முடியாதிருந்தது. இக்கடன்களை ஊழியர் சேமலாப நிதியிலிருந்து அறவிடுவதாக உபவேந்தர் அறிவித்திருந்தார்.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை

கீழே காட்டப்பட்டுள்ள இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், என்பவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
| --- | --- |
| (அ) திறைசேரிச் சுற்றறிக்கை | |
| (i) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க சுற்றுநிருபம் | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடு உரிய சுற்றுநிருப அறிவுறுத்தல்களின் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 2002 இன் நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க சுற்றுநிருபம் | கணனி உபகரணங்கள் தொடர்பாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 2009 செப்தம்பர் 01 ஆந் | நிலையான சொத்துக்கள் பராமரிப்பு |

| | |
|---|---|
| திகதிய DMA/2009 (2) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வு திணைக்கள சுற்றுநிருபம் | தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய செயற்பாட்டு நடைமுறையொன்று சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக எவ்வித கவனமும் செலுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய PF/ மெய்மையாய்வுச் சபை 01 ஆம் இலக்க கடிதத்தினால் திருத்தப்பட்ட அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் 441 ஆம் இலக்க 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய சுற்றுநிருபம் | வருடாந்த பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் அடுத்த ஆண்டின் மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்டு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளுக்குரிய பொருள் மெய்மையாய்வு அறிக்கைகள் 2013 யூலை 24 ஆந் திகதி வரையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (இ) 1989 ஒக்தோபர் 25 ஆம் திகதிய 408 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு சுற்றுநிருபம் | மேற்குறித்த சுற்றுநிருபத்திற்கு முரணாக பேராசிரியர் ஒருவருக்கு வருடாந்த விடுமுறை 08 மாதங்களுக்கு கூடுதலாக வழங்கியமை மற்றும் அதற்கு இணையாக வழங்கப்படும் விமானப் பயணச் சீட்டிற்காக ரூபா 214,800 தொகையை வழங்குவதற்கு பல்கலைக் கழகத்திற்கு நேர்ந்திருந்தது. இவ்வாறு பல்கலைக்கழகத்திற்கு ஏற்பட்ட நிதிசார் நட்டத்தை குறித்த பேராசிரியரிடமிருந்து அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதும், அதற்கு எதிராக அவரால் வழக்கொன்று தொடரப்பட்டிருந்தது. மேற்படி விடுமுறைக்காக தவறான முறையில் கணக்கிட்டு அங்கீகரிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டிற்காக பல்கலைக்கழகத்தின் செயற்பாடுகளிலிருந்து நிதிசார்

விளைவுகள் மீண்டெழும் செலவினத்திற்கான அரசாங்க மானியத்தைக் கணக்கிற்கு எடுக்க முன்னர், ரூபா 677,230,009 தொகையான பற்றாக்குறையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 565,899,027 ஆக இருந்தது. மீண்டெழும் செலவினத்திற்கான அரசிடமிருந்து கிடைத்த ரூபா 580,597,980 மானியம் காரணமாக மீளாய்வாண்டின் பற்றாக்குறை ரூபா 96,632,029 வரை குறைவடைந்திருந்தடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டில் மீண்டெழும் செலவினத்திற்கான அரசிடமிருந்து கிடைத்த ரூபா 458,946,140 அரச மானியம் காரணமாக அவ்வாண்டின் பற்றாக்குறை ரூபா 131,450,782 ஆக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 34,818,753 ஆல் அதிகரித்திருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மீளாய்வாண்டின் போது பல்கலைக்கழகத்தின் 05 பீடங்களில் கல்வி கற்ற 3,164 மாணவர்களுக்காக ரூபா 575,946,435 தொகையும் அதனோடு ஒத்த முன்னைய ஆண்டின் 3,774 மாணவர்களுக்காக ரூபா 490,177,119 மீண்டெழும் செலவினமாக செலவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு மாணவனுக்கான கிரயம் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பீடங்கள் | 2012 | 2011 |
|---|---|---|
| விவசாய விஞ்ஞான பீடம் | 309,714 | 211,626 |
| பிரயோக விஞ்ஞான பீடம் | 174,344 | 121,467 |
| முகாமைத்துவ பீடம் | 139,669 | 101,608 |
| சமுக விஞ்ஞான பீடம் | 184,353 | 127,366 |
| புவிச்சரிதவியல் பீடம் | 223,987 | 173,834 |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) போலி கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்த பெண் உத்தியோகத்தர் ஒருவரினால், சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டமை தொடர்பாக சப்ரகமுவ வலய தொழில் ஆணையாளரிடம் முறைப்பாடு ஒன்று செய்திருந்த போதும்

அப்பரிசோதனைக்காக பல்கலைக்கழகத்தின் சார்பில் முகவர் ஒருவர் சமூகமளிக்காததன் காரணமாக பல்கலைக்கழகத்தின் உரிமை கைவிடப்பட்டிருந்தது. பின்னர் தொழில் ஆணையாளரால் வழங்கப்பட்ட ஒரு தரப்பினரான பரிந்துரைக்கு எதிராக எதிர்ப்பினை தெரிவிக்க முடியுமாக இருந்த போதிலும் அவ்வாறு ஏதேனும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ரூபா 244,221,885 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்களின் சட்டரீதியான உரித்தை உறுதிப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அமைச்சரவையினால் 2005 ஆகஸ்ட் 24 ஆம் திகதிய 2005/ED/HE/56 ஆம் இலக்க அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழிநுட்ப கட்டிடம், பெண் மாணவர்களுக்கான விடுதி மற்றும் 2005 மே 24 ஆம் திகதிய 05/0600/035/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் நிர்வாகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2013 யூன் 30 ஆம் திகதி வரையில் எந்தவொரு கட்டிடத்தையும் நிர்மாணிப்பதற்கு ஆரம்பிக்கப்படாதிருக்கையில் அதற்காக ரூபா 3,633,909 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(ஈ) பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் தீர்மானங்கள் / அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமை பின்வருமாறு காட்டப்பட்டுள்ளது.

| | கணக்காய்வுப் பந்தி | பொது முயற்சிகள் தொடர்பான பாராளுமன்றக் குழுவின் தீர்மானங்கள் / அறிவுறுத்தல்கள் | தற்போதய நிலைமை |
|---|---|---|---|
| (i) | பல்கலைக்கழக வளவில் விவசாய விஞ்ஞான பீடத்தின் பீடாதிபதியின் தனிப்பட்ட வாகனத்திற்கான சேதத்திற்காக பல்கலைக்கழக நிதியிலிருந்து | அப்பணத்தை மீண்டும் தீர்ப்பதற்கும் அது தொடர்பான விபரமான அறிக்கையொன்றை குழுவிற்குச் சமர்ப்பித்தல் | அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில் லை. |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா 60,000 செலுத்தப்பட்டமை | | |
| (ii) | ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,225,981 ஆன வேலை ஆரம்ப செலவினத்தை ஒப்பந்தகாரர் உரிய நடவடிக்கைகளை நிறைவேற்றாததன் காரணமாக மீண்டும் அறவிடுதல் | பிணைப்பொறுப்பு வைக்கப்பட்டிருந்த வங்கி அத்தொகையை தீர்க்காமையால் பல்கலைக்கழகத்தினால் குறித்த வங்கிக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | சுருக்கெழுத்தாளர் (ii) ஆம் தரத்தில் பதவியொன்று வகித்த உத்தியோகத்தர் ஒருவரின் கடன் தொகையான ரூபா 1,993,082 தீர்க்காமல் வெளிநாடு சென்றமை மற்றும் சேவை யிலிருந்து விலகியமை) | சட்டரீதியான நடவடிக்கை எடுத்தல் | சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 3.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பிரயோக விஞ்ஞான பீடத்தின் விரிவுரைகளை நடாத்துவதற்காக பயன்படுத்தப்பட்ட 7,926 சதுர அடி அளவிலான 06 கட்டிடங்கள் 2013 யூன் 24 ஆம் திகதி வரையில் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

(ஆ) ரூபா 4,360,206 பெறுமதியான 03 இயந்திர உபகரணங்கள் 02 ஆண்டு காலமாகவும் ரூபா 749,472 பெறுமதியான இயந்திரமொன்று 06 மாத காலமாகவும் பயன்படுத்தப்படாமல் காணப்பட்டன.

## 3.4 பதவியினர் நிர்வாகம்

பல்கலைக்கழகத்தின் கல்விசார் பதவியணியில் 02 பீடங்களின் 04 பேராசிரியர் பதவிகள் மற்றும் நிர்வாக பதவியணியில் நிதியாளர் மற்றும் சிரேஷ்ட உதவி பதிவாளர் பதவிகளிலும் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வெற்றிடம் ஒன்றையும் நிரப்புவதற்கு பல்கலைக்கழகத்தின் கட்டுப்பாட்டு அதிகாரி தவறியிருந்தார்.

## 04. கணக்களிதன்மையும் நல்லாட்சியும்

### 4.1 கூட்டுத்திட்டம்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க முயற்சிகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் 2011 முதல் 2015 ஆம் ஆண்டுகளுக்குரிய கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக காலரீதியாக மீளாய்வு செய்து நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 செயல் நடவடிக்கைத் திட்டம்

கூட்டுத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டவைகளை நிறைவேற்றுவதற்காக வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 05. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள பலவீனங்கள் கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் அவ்வப்போது பல்கலைக்கழகத்தின் உபவேந்தரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) வெளிநாட்டு விடுமுறைகளை அங்கீகரித்தல்
(ஈ) விடுதிகளை வாடகைக்குப் பெறல்
(உ) வாகனப் பயன்பாடு